முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.1336/2024**

**Witness PW 1**

பெயர்:விஜயலட்சுமி

த/பெ.: சின்னதுரை

இன்று (06/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

என் தாத்தா பெயர் வீரகவுண்டர் என்று சொன்னால் சரிதான். வீரகவுண்டருக்கு தங்கவேலு, கோவிந்தன், ஆறுமுகம், ராமசந்திரன் என நான்கு மகன்கள் உண்டு என்றால் சரிதான். வழக்கு பி, சி பட்டியல் சொத்துள் வீரகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வீரகவுண்டர் இறந்தபிறகு அவரின் வாரிசுகள் வீரகவுண்டரின் சொத்துகளை தங்களுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், என் தந்தை சொல்லி தெரியும். பி பட்டியல் சொத்தில் நான்கு இன சொத்துகளை காட்டியுள்ளேன். பி பட்டியல் சொத்தில் உள்ள சர்வே எண்கள் 148/5ஏ1, 148/5ஏ2, மேலும் இன்னும் இரண்டு புலஎண்கள் எனக்கு தெரியவில்லை. ஆர்.சி.சி.மெத்தை வீடு ஒன்று உள்ளது. அது எந்த புலஎண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி வீடு மாரியம்மன் கோவில் தெருவில் உள்ளது. அது 10 செண்ட் விஸ்தீரணம் உடையது. மேற்படி மெத்தை வீட்டிற்கான கதவு எண், மின்இணைப்பு எண் ஆகியவை எனக்கு தெரியாது. மேற்படி மெத்தை வீட்டில் சித்தி ராஜேஸ்வரி ஆகிய 4ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி ஆகியோர் குடியிருந்து வருகின்றனர். அந்த வீட்டில் விவரம் தெரிந்த நாளிலிருந்து மேற்படி நபர்கள் குடியிருந்து வருகின்றனர். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்குரை சொத்துகளில் மேற்படி வீட்டை காட்டவில்லை என்றால் சி பட்டியல் 4வது இன சொத்தாக காட்டப்பட்டுள்ளது (சாட்சியிடம் வழக்குரையில் கண்டுள்ள மேற்படி சி பட்டியல் 4வது இன சொத்தின் சக்குபந்தி வாசித்து காட்டப்பட்டு சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது). பி மற்றும் சி பட்டியல் 1வது இன சொத்தின் சர்வே எண். 148/8பி என குறிப்பிட்டுள்ளேன், அதற்கு பழைய எண் வழக்குரையில் 125/10 என குறிப்பிட்டுள்ளேன், ஆனால் 125/10 என்பது தவறாகும். மேற்படி 125/10 தவறானது என

பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**(Sd/-C.R.Gowthaman)**
**Principal Subordinate Judge ,**
Villupuram.